[திரு. சி. பொன்னையன்] [2004 ஜூலை 23

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அந்த ஆலோசனைகளை எல்லாம் கட்டாயமாகப் பரிசீலித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை எடுத்துச் சொல்லி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தொலைநோக்குச் சிந்தனையோடு உருவான இந்த நிதிநிலை அறிக்கைக்கு அவை ஏற்பளிக்க வேண்டும் என்று கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை *(26–07–2004)* காலை *10–00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 6–12 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

34. வணிக வரித் துறையின் *16–2–2001* ஆம் நாளிட்ட 24 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கையினை இரத்து செய்தது மற்றும் சென்னை அரசினர் பொது மருத்துவமனை, சென்னை மருத்துவக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனம், இதய நோயியல் நிறுவனத்தால் வாங்கப்பட்ட எத்திலின் ஆக்சைடு ஸ்டெரிலைசர் (Ethylene Oxide Steriliser) மீது செலுத்தத்தக்க வரிக்கு விலக்களித்தது குறித்து வணிக வரித் துறையின் *19–5–2004* ஆம் நாளிட்ட *95* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53 (5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

35. மனநலம் குன்றிய மற்றும் உடல் ஊனமுற்ற குழந்தைகளின் போக்குவரத்துக்காக கும்பகோணத்திலுள்ள திருவாளர்கள் இந்திய உடல் ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வு சங்கத்தால் வாங்கப்பட்ட TN 49 U 1222 பதிவு எண் கொண்ட பள்ளி வேனின் மீது செலுத்தத்தக்க வரித்தொகை மற்றும் மேல் வரியினை தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரித் துறையின் *28–5–2004* ஆம் நாளிட்ட *100* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53 (5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2004 ஜூலை 23]

36. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு புகைப் பிடித்தலையும், எச்சில் உமிழ்வதையும் தடை செய்தல் சட்டம், 14–5–2003 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வருவது குறித்தும், மேற்படி சட்டத்தின்கீழ் செயல்படுவதற்காக தகுதிவாய்ந்த நபர்களுக்கு அதிகாரம் அளிப்பது குறித்தும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் 14–5–2003 ஆம் நாளிட்ட 91 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு புகைப் பிடித்தலையும், எச்சில் உமிழ்வதையும் தடை செய்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/2003) 18 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

37. 2002–2003 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

38. 2002–2003 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் இருபத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

39. 2002–2003 ஆம் ஆண்டு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்–1) முப்பத்திரெண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

40. 2002–2003 ஆம் ஆண்டு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்–3) இருபதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

41. 2002–2003 ஆம் ஆண்டு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்–4) பதினேழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

42. 2002–2003 ஆம் ஆண்டு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர் கோட்டம்–1) முப்பத்திரெண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

43. 2002–2003 ஆம் ஆண்டு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர் கோட்டம்–2) இருபதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

44. 2002–2003 ஆம் ஆண்டு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (சேலம் கோட்டம்–2) பதினாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

45. 2002–2003 ஆம் ஆண்டு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம் கோட்டம்–3) பதினோராவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

9. கணினி துணை பாகங்கள் மற்றும் உதிரி பாகங்களின் மாநிலங்களுக்கிடையிலான விற்பனையைப் பொறுத்தவரையில் வணிகர்கள் செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்து வணிக வரித் துறையின் 12–2–2004 ஆம் நாளிட்ட 46 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

10. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

11. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

12. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

13. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

14. உடுக்குறியிடாத வினாக்கள்– விடைகள் (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)